(எட்டாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 5(5).]

# பாராளுமன்றம்

## 5 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2017 சனவரி 27 வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது

## 2017 பெப்ரவரி 07, செவ்வாய்க்கிழமை

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சரும்,— இலஞ்சம் அல்லது ஊழல்கள் பற்றிய விசாரணை ஆணைக்குழு இலஞ்சம் தொடர்பான திடீர் சோதனைகள் முற்பணக் கணக்கின் வரையறைகளில் திருத்தம் மேற்கொள்ளல் - 2016 (விடய இலக்கம் - 01002),— பத்தொன்பதாவது அரசியலமைப்புச் சீர்திருத்தத்தின் ஊடாக திருத்தப்பட்டவாறான இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 41 (ஆ) உறுப்புரையின் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள இலஞ்சம் அல்லது ஊழல்கள் பற்றிய குற்றச்சாட்டுக்கள் விசாரணை ஆணைக்குழுவின் இலஞ்சம் தொடர்பான திடீர் சோதனைகள் முற்பணக் கணக்கின் வரையறைகளைத் திருத்தியமைப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாதலாலும்;

அதற்கிணங்க, இலஞ்சம் தொடர்பான திடீர் சோதனைகளின் பொழுது இலஞ்சமாகப் பயன்படுத்துவதற்கு முற்பணங்களாகச் செலுத்துவதற்காக மதிப்பீட்டில் தற்போது கீழே குறிப்பிடப்பட்டுள்ள வரையறைகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளதாதலாலும்:—

| | |
|---|---|
| உச்ச செலவு வரையறை | - ரூ. 150,000,000.00 |
| குறைந்த வரவு வரையறை | - ரூ. 5,000,000.00 |
| உச்ச பற்று மீதி வரையறை | - ரூ. 275,000,000.00 |

2016 ஆம் ஆண்டிற்காக இந்த திடீர் சோதனைக் கணக்கின் எதிர்பார்க்கப்படும் மீதி கீழே குறிப்பிடப்பட்டுள்ளது:—

| | |
|---|---|
| 2016.01.01 திகதியன்று பற்று மீதி | - ரூ. 19,340,031.98 |
| ஆண்டிற்காக எதிர்பார்க்கப்படும் பற்று | - ரூ. 150,000,000.00 |
| ஆண்டிற்காக எதிர்பார்க்கப்படும் வரவு | - ரூ. 1,700,000.00 |
| 2016.12.31 திகதியன்று எதிர்பார்க்கப்படும் பற்று மீதி | - ரூ. 167,640,031.98 |

முன்னைய வருடங்களில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் முடிவடையாததன் காரணமாக வழக்கிற்குரிய பொருட்களாக தடுத்துவைக்கப்பட்டுள்ள பணத்தை வரவு வைக்க முடியாதுபோனமை காரணமாக வரவில் குறைவு ஏற்பட்டுள்ளதாதலாலும்;

அதற்கிணங்க, இலஞ்சம் அல்லது ஊழல்கள் பற்றிய குற்றச்சாட்டுக்கள் விசாரணை ஆணைக்குழுவின் திடீர் சோதனைகள் முற்பணக் கணக்கின் குறைந்த வரவு வரையறையை ரூபா 5,000,000.00 இலிருந்து ரூபா 1,500,000.00 வரை குறைப்பதற்கு இப்பாராளுமன்றம் பிரேரணை நிறைவேற்றுகிறது.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

சுற்றுலாத்துறை அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சரும் காணி அமைச்சரும்,— காணி எடுத்தற் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— (460 ஆம் அத்தியாயமான) காணி எடுத்தற் சட்டத்தின் 63 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ஊ) பந்தியின் கீழ் 2013 ஆம் காணி எடுத்தற் (நட்டஈடு செலுத்துதல்) ஒழுங்குவிதிகளின் 4(2) ஆம் ஒழுங்குவிதியைத் திருத்தி காணி அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2016 நவம்பர் 18 ஆம் திகதிய 1993/26 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2017.01.24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

*

சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர்,— தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைச் சட்டத்தின் கீழ் கட்டளை,— 2015 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைச் சட்டத்தின் 118 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 142 ஆவது பிரிவின் கீழ் சுகாதார, போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரினால் விலைகளின் மீதான உச்சவரம்பு தொடர்பாக ஆக்கப்பட்டு, 2016 ஒற்றோபர் 21 ஆம் திகதிய 1989/61 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2017.01.24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

*

நிதி அமைச்சர்,— மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் கீழ் அறிவித்தல்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (52 ஆம் அத்தியாயம்) 22 (2) ஆம் பிரிவின் கீழ் மீள் ஏற்றுமதிக்காக அல்லது தீர்வையற்ற கடைகளில் வெளிநாட்டு அலகில் விற்பனை செய்வதற்காக இறக்குமதி செய்யப்படுகின்ற வெளிநாட்டு மதுபானம் மீது மதுவரியினை விலக்களிப்பது தொடர்பில் 2016 ஒற்றோபர் 04 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில், நிதி அமைச்சரினால் விதிக்கப்பட்டு, 2016 ஒற்றோபர் 03 ஆம் திகதிய 1987/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2017.01.24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இல. 990)

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

நிதி அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை,— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் 3 ஆம் உப பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2016 நவம்பர் 10 ஆம் திகதிய 1992/27 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2017.01.24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

நிதி அமைச்சர்,— சுங்கக் கட்டளைச்சட்டத்தின் கீழ் தீர்மானம்,— 2017.01.24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, (235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழ் இறக்குமதி தீர்வைகள் தொடர்பிலான தீர்மானம் அங்கீகரிக்கப்படுமாக.

(2016 நவம்பர் 10 ஆம் திகதிய 1992/26 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை)

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சர்,— கம்பனிகள் சட்டம் மற்றும் சங்கங்கள் கட்டளைச்சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 477 ஆம் பிரிவுடன் வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 527 ஆம் பிரிவின் கீழ் மற்றும் 2005 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க சங்கங்கள் கட்டளை (திருத்தச்) சட்டத்துடன் வாசிக்கப்படும் (123 ஆம் அத்தியாயம்) 1891 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க சங்கங்கள் கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் கீழ், கம்பனிகள் (கட்டணம்) மற்றும் சங்கங்கள் (கட்டணம்) தொடர்பாக கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2016 ஒற்றோபர் 25 ஆம் திகதிய 1990/12 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2017.01.24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்,— இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் கட்டளை,— 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழ் செஸ் வரி தொடர்பில் அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2016 நவெம்பர் 11 ஆம் திகதிய 1992/52 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2017.01.26 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்,— செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் கீழ் கட்டளை,— 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3 (4) ஆம் பிரிவின் கீழ் உத்தேசிக்கப்பட்ட கருத்திட்டம் சம்பந்தமாக அளிக்கப்படவுள்ள விலக்களிப்புக்கள் தொடர்பில் அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2016 நவெம்பர் 18 ஆம் திகதிய 1993/34 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2017.01.27 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்,— ஏற்றுமதி இறக்குமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டம் மற்றும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டங்களின் மூலம் திருத்தப்பட்ட, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க ஏற்றுமதி இறக்குமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் 4 ஆவது பிரிவின் (3) ஆவது உப பிரிவு மற்றும் 14 ஆவது பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆவது பிரிவின் கீழ் அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2016 திசெம்பர் 30 ஆம் திகதிய 1999/47 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2017.01.27 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

## 2017 மார்ச்சு 09, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1060/ '16

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— சட்டமும் ஒழுங்கும் மற்றும் தென் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மக்கள் பிரதிநிதிகள் அல்லாத இலங்கைப் பிரசைகளுக்கு பிரத்தியேகமாக பொலிஸ் பாதுகாப்பு வழங்கும் வேலைத்திட்டமொன்று பொலிஸ் திணைக்களத்திடம் உள்ளதா;

(ii) ஆமெனில், அவ்விதம் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ள ஆட்கள் யாவர்;

(iii) இவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவு;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) அரசியல் கட்சிகளின் தொகுதி அமைப்பாளர்களுக்கு பொலிஸ் அல்லது இராணுவத்தின் பாதுகாப்பு வழங்கப்படுகின்றதா;

(ii) ஆமெனில், அவ்விதம் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ள ஆட்கள் யாவர்;

(iii) இவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவு;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1095/ '16

கௌரவ அசோக்க பிரியந்த,— சமூக வலுவூட்டல் மற்றும் நலன்புரி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சமுர்த்தி மாதிரிக் கிராமங்கள் நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கங்கள் யாவை என்பதையும்;

(ii) அக்கருத்திட்டத்தின் கீழ் மேற்படி (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள நிகழ்ச்சித் திட்டத்திற்காக புத்தளம் மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்டுள்ள கிராமங்கள் யாவையென்பதையும்;

(iii) அந்த ஒவ்வொரு கிராமத்தினதும் அபிவிருத்திக்காக செலவிடுவதற்கு எதிர்பார்க்கப்படும் பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(iv) அக்கருத்திட்டத்தின் கீழ் ஒரு கிராமத்துக்குக் கிடைக்கும் வளங்களின் அளவு யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1110/ '16

கௌரவ சமிந்த விஜேசிறி,— கைத்தெழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பண்டாரவெல பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் தற்போதைய பணிப்பாளர் சபை உறுப்பினர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவையென்பதையும்;

(ii) இவர்களது கல்வித் தகைமைகள் தனித்தனியாக யாதென்பதையும்;

(iii) தற்போது மேற்படி கூட்டுறவுச் சங்கத்தின் பிரதேச சங்கங்களில் நட்டத்தில் இயங்குகின்ற மற்றும் இலாபம் ஈட்டுகின்ற பிரதேச சங்கங்கள் தனித்தனியாக யாவையென்பதையும்;

(iv) கடந்த நாட்களில் நடைபெற்ற உத்தியோகத்தர் தெரிவு தொடர்பாக ஏதேனும் முறைப்பாடு கிடைத்துள்ளதா என்பதையும்;

(v) ஆமெனில், அது தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1126/ '16

கௌரவ விதுர விக்கிரமநாயக்க,— கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தொழில்முயற்சியாளர்களை வலுவூட்டும் பொருட்டு சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில்கள் மற்றும் நுண்பாக கைத்தொழில்களுக்கு சலுகை வட்டியின் அடிப்படையில் இரண்டு வருடகால சலுகைக் காலத்துடன் SMILE III கடன் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டதென்பதையும்;

(ii) கருத்திட்ட பணிப்பாளரினால் 2016 யூலை மாதம் 10 ஆம் திகதி பத்திரிகைகளில் அறிவித்தல்கள் வெளியிடப்பட்டு, கடன் வழங்குதல் சம்பந்தமாக பிரச்சாரம் செய்யப்பட்டதென்பதையும்;

(iii) மேற்படி கருத்திட்டத்தின் மூலம் கடன் வழங்குவதற்கு 10 வர்த்தக வங்கிகள் முன்வந்ததுடன், கடனை எதிர்பார்த்து 5000 கடன் விண்ணப்பதாரிகள் முன்வந்த போதிலும் கடன் வழங்குதல் நிறுத்தப்பட்டுள்ளதென்பதையும்;

(iv) பல தொழில்முயற்சியாளர்களினால் தேவையான அடிப்படை செலவுகள் மேற்கொள்ளப்பட்டு பிணை உறுதிகளை கைச்சாத்திடல், ஈட்டுறுதிகளை தயாரித்தல் போன்ற நடவடிக்கைகள் நிறைவுசெய்யப்பட்டுள்ள போதிலும் கடன் வழங்கப்படவில்லை என்பதையும்;

(v) இந்த நிலைமையின் காரணமாக புதிய தொழில்முயற்சிகள் மற்றும் மேம்படுத்தப்படும் தொழில்முயற்சிகள் இடைநடுவே தடைப்பட்டுள்ளதுடன், இது தேசிய பொருளாதாரத்திற்கும் பெரும் தாக்கமாக அமைந்துள்ளது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) கடன் தொகையை வழங்குவதற்கு ஆற்றல் இல்லையெனில், 2016.07.10 ஆம் திகதிய பத்திரிகைளில் அறிவித்தல்களை வெளியிட்டு மக்களை அசௌகரியத்திற்கு உள்ளாக்கியதற்கான காரணம் யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1127/ '16

கௌரவ வாசுதேவ நாணயக்கார,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கடந்த அரசாங்கத்தினால் ரூபா 350/- உர மானியம் பெற்றுக்கொடுக்கப்பட்ட போது உர மூட்டையொன்றுக்கு, மேலதிகமாக ரூபா 150/- அறவிடப்பட்டு, "கெதட அருண நிகழ்ச்சித்திட்டத்தின்" கீழ் வரட்சி, வெள்ளம் மற்றும் காட்டு யானைகள் தொந்தரவு என்பவற்றுக்காக ரூபா 10,000/- உச்ச வரம்புக்குட்பட்டதாக கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதிச் சபையின் ஊடாக இழப்பீடொன்று செலுத்தப்பட்டதை அவர் ஏற்றுக்கொள்வாரா;

(ஆ) தற்போது நாடு முழுவதும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ள கடும் வரட்சியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு காப்புறுதி இழப்பீட்டுத் தொகையொன்றை பெற்றுக்கொடுப்பாரா என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1276/ '16

கௌரவ காஞ்சன விஜேசேகர,— கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) வெளிநாட்டுச் செலாவணியை ஈட்டிக்கொள்வதிலும் மக்களது போசாக்குத் தேவைகளை நிறைவேற்றிக்கொள்வதிலும் பங்களிப்பை வழங்குகின்ற கடற்றொழிலின் இடையறா இருப்பை ஏற்றுக்கொள்கிறாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மாத்தறை மாவட்டத்தின்,

(i) கடற்றொழில் துறைமுகங்கள், நங்கூரமிடும் தளங்களின் எண்ணிக்கை மற்றும் அவை அமைந்துள்ள இடங்கள் யாவையென்பதையும்;

(ii) ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவுக்கமைய பதிவு செய்யப்பட்டுள்ள பலநாள் கலங்கள் மற்றும் ஒருநாள் மீன்பிடிக் கலங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தின் புள்ளி விபரங்களின் படி, ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவிலும் வசிக்கின்ற கடற்றொழிலாளர்களின் எண்ணிக்கை, தனித்தனியாக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) 2013 ஆம் ஆண்டு தொடக்கம் 2016 ஆம் ஆண்டு வரை மாத்தறை மாவட்டத்தில்,

(i) கடற்றொழில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த செலவிடப்பட்டுள்ள பணத்தொகை யாதென்பதையும்;

(ii) மானிய அடிப்படையில் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள பலநாள் கலங்கள் மற்றும் ஒருநாள் கலங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) பிரதேச செயலாளர் பிரிவு வாரியாக மானிய அடிப்படையில் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள மீன்பிடி உபகரணத் தொகுதிகள், செய்திப் பரிமாற்ற இயந்திரங்கள் மற்றும் உயிர் பாதுகாப்பு அங்கிகளின் எண்ணிக்கை ஒவ்வொரு ஆண்டின்படி தனித்தியாக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1373/ '16

கௌரவ பந்துல குணவர்தன,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2016 வரவு செலவு திட்டத்தின் 126 வது இலக்க முன்மொழிவின் பிரகாரம், சிறிய மட்டும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர்களின் சந்தைப்படுத்தல் மேம்பாட்டுக்காக தனியார் துறையினரின் அலுமாரித் தட்டுகளில் இடவசதிகள் நியாயமான விலைக்கு பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) தனியார் துறையினரின் சிறப்புச் சந்தைகளில் மேற்படி அலுமாரித் தட்டுகளில் இடவசதிகளை ஒதுக்கித் தரும்படி ஏதேனும் அமைச்சினால் கோரப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) அத்தகைய கோரிக்கையோ அல்லது கட்டளையோ விடுக்கப்பட்டிருப்பின், அதன் பிரதியொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iv) இலங்கையில் அமைந்துள்ள வரி அறவிடப்படுகின்ற தனியார்துறை சிறப்புச் சந்தைகளின் எண்ணிக்கையையும் அவை அமைந்துள்ள நகரங்களின்/ கிராமங்களின் பட்டியலொன்றையும் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

## 2017 மார்ச்சு 10, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

966/ '16

கௌரவ பிமல் ரத்நாயக்க,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2010 - 2016 ஆம் ஆண்டு வரையான காலத்தில்,

(i) இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ள இரசாயன பசளையின் அளவு;

(ii) ஒவ்வொரு போகத்திற்காகவும் அரசாங்கத்தினால் விநியோகிக்கப்பட்டுள்ள இரசாயன பசளையின் அளவு;

(iii) நெற்செய்கைக்காகவும் மரக்கறி செய்கைக்காகவும் விநியோகிக்கப்பட்டுள்ள இரசாயன பசளையின் அளவு;

(iv) இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்ட சேதனப் பசளையின் அளவு;

(v) ஒவ்வொரு போகத்திற்காகவும் அரசாங்கத்தினால் விநியோகிக்கப்பட்டுள்ள சேதனப் பசளையின் அளவு;

(vi) நெற்செய்கைக்காகவும் மரக்கறி செய்கைக்காகவும் விநியோகிக்கப்பட்டுள்ள சேதனப் பசளையின் அளவு;

ஆண்டுவாரியாக தனித்தனியாக எவ்வளவென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

996/ '16

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் இலங்கை அரசாங்கத்துக்கு வெளிநாடுகளிலிருந்து மற்றும் சர்வதேச நிறுவனங்களிலிருந்து கிடைக்கப் பெற்ற அளிப்புகள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(ii) 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகின்றபோது 2015 ஆம் ஆண்டில் வெளிநாட்டு அன்பளிப்புகளில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், சர்வதேச சமூகத்தை வென்று விட்டதாக கூறும் அரசாங்கமொன்று இருக்கையில், வெளிநாட்டு அளிப்புகள் வீழ்ச்சியடைவதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1102/ '16

கௌரவ செயிட் அலி ஸாஹிர் மௌலானா,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மட்/நாவற்கேணி கண்ணகி வித்தியாலய ஆசிரியை திருமதி நளினகாந்தி விமலேந்திரன் அவரது பயிற்சியை மட்டக்களப்பு ஆசிரியர் கலாசாலையில் 2008 இல் பூர்த்தி செய்ததும் முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள கைவேலி கணேசா வித்தியாலத்திற்கு நியமனம் செய்யப்பட்டார் என்பதையும்;

(ii) மட்டக்களப்பு ஆசிரியர் கலாசாலையில் 2009 ஏப்ரல் மாதம் நடைபெற்ற இறுதிப் பரீட்சைக்குத் தோற்றுமாறு அவர் கோரப்பட்டார் என்பதையும்;

(iii) அக்கால கட்டத்தில் யுத்தம் உச்ச கட்டத்தினை அடைந்திருந்த காரணத்தினால் முல்லைத்தீவினை விட்டுச் செல்ல யாரும் அனுமதிக்கப்படவில்லை என்பதையும்;

(iv) தனது கனிஷ்ட தொகுதியினருடன் பரீட்சைக்குத் தோற்றிய அவரின் சான்றிதழின் செயற்படும் திகதி 01.01.2011 என வழங்கப்பட்டுள்ள அதேவேளை கனிஷ்ட தொகுதியினருக்கு இது 01.08.2009 என வழங்கப்பட்டுள்ளது என்பதையும்;

(v) இந்த அநீதியினைப் பற்றி ஜனாதிபதிக்கு இவர் விண்ணப்பித்ததைத் தொடர்ந்து ஜனாதிபதியின் இணைப்புச் செயலாளர் SL/EDU/APP/0043 இலக்கமுடைய 2016.08.01 ஆம் திகதியிடப்பட்ட கடிதத்தினை இந்த ஒழுங்கீனத்தை நிவர்த்தி செய்யுமாறு கோரி அப்போதைய கல்வி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பி வைத்திருந்தார் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) அவரது சான்றிதழின் செயற்படும் திகதியை 01.08.2009 என மாற்றுவதற்கு அறிவுறுத்தல் வழங்கப்படுமா என்பதை அவர் இச்சபைக்கு அறியத்தருவாரா?

(இ) இன்றேல் ஏன்?

1112/ '16

கௌரவ சமிந்த விஜேசிறி,— போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சுக்குச் சொந்தமான திணைக்களங்கள், அதிகார சபைகள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் ஏனைய நியதிச் சட்ட நிறுவனங்கள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு நிறுவனத்திலும் கடமையாற்றுகின்ற மொத்த ஊழியர்களின் எண்ணிக்கை தனித்தனியாக யாதென்பதையும்;

(iii) 2015 இல் தற்போதைய நல்லாட்சி அரசாங்கம் ஆடசிக்கு வந்த பின், மேற்படி ஒவ்வொரு நிறுவனத்திற்கும் ஆட்சேர்க்கப்பட்ட மொத்த ஊழியர்களின் எண்ணிக்கை தனித்தனியாக யாதென்பதையும்;

(iv) மேற்படி (iii) இல் குறிப்பிடப்பட்டுள்ள ஆட்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவையென்பதையும்;

(v) தற்போது மேற்படி நிறுவனங்களில் வெற்றிடங்கள் உள்ளனவா என்பதையும்;

(vi) ஆமெனில், எதிர்காலத்தில் ஊழியர்கள் ஆட்சேர்க்கப்படும் முறையியல் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1128/ '16

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— மகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மேல் மாகாணத்தின் தற்போதைய முதலமைச்சர் அப்பதவிக்கு நியமிக்கப்பட்டதன் பின்னர் மேற்கொண்டுள்ள வெளிநாட்டு விஜயங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) விஜயம் செய்த நாடுகளும் அவ்விஜயங்களுக்காக செலவிடப்பட்ட பணத் தொகையும் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட விஜயங்களின் நோக்கங்கள் வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iv) குறிப்பிட்ட வெளிநாட்டு விஜயங்களின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் தொடர்பாக அடையப்பெற்றுள்ள முன்னேற்றம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1132/ '16

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— அபிவிருத்தி உபாயமுறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) டாக்டர் நெவில் பர்னாந்து முதலீட்டுத் தனியார் கம்பெனிக்கு உயர்கல்வி நிறுவனமொன்றை ஆரம்பிக்க இலங்கை முதலீட்டுச்சபை அனுமதி வழங்கியுள்ளதா;

(ii) ஆமெனில், அது எத்தகைய பட்டங்களை வழங்குவதற்காக;

(iii) அந்நிறுவனத்துடன் உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்ட திகதி யாது;

(iv) அந்த உடன்படிக்கையை சபையில் சமர்ப்பிப்பாரா;

(v) இலங்கையினுள் தாதியர் பட்டம் மற்றும் சுகாதார விஞ்ஞான பட்டத்தை வழங்குவதற்கான அங்கீகாரம் அளிக்கையில் சுகாதார அமைச்சின் முன்னனுமதி பெறப்படல் வேண்டுமென்ற நிபந்தனையை மேற்சொல்லப்பட்ட கம்பெனி நிறைவேற்றி உள்ளதா;

(vi) ஆமெனில், சுகாதார அமைச்சின் மேற்படி அனுமதி வழங்கப்பட்ட கடிதத்தை சபையில் சமர்ப்பிப்பாரா;

(vii) இன்றேல், முதலீட்டுச் சபையுடனான இணக்கப்பாட்டினை மீறிய அக்கம்பெனிக்கு எதிராக மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1345/ '16

கௌரவ மஹிந்தானந்த அலுத்கமகே,— அரச தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (I) கடந்த அரசாங்கத்தினால் ஸ்ரீ லங்கன் விமானக் கம்பனிக்கு A350 ரக மூன்று விமானங்களை கொடுப்பனவு அடிப்படையில் வெளிநாட்டு நிறுவனமொன்றிலிருந்து பெறுவதற்கு கொள்வனவுக் கட்டளை அனுப்பப்பட்டிருந்ததென்பதையும்;

(ii) புதிய அரசாங்கம் பதவியேற்றதன் பின்னர் மேற்படி கொள்வனவுக் கட்டளை இரத்துச் செய்யப்பட்டதென்பதையும்;

(iii) கொள்வனவுக் கட்டளையை பெற்றுக்கொண்ட AerCap நிறுவனம் உடன்படிக்கையை இரத்துச் செய்வதற்காக டொலர் 97 மில்லியன் இழப்பீட்டுத் தொகையொன்றை கோரியிருந்ததென்பதையும்;

(iv) விமானங்கள் கொள்வனவு செய்யப்படாத பட்சத்தில், அவற்றை வேறு விமான நிறுவனங்களுக்கு விற்பனை செய்வதற்கான இயலுமை காணப்படுகையில், அமைச்சரவையை தவறாக வழிநடத்தி இழப்பீடு செலுத்துவது தொடர்பாக கலந்துரையாடுவதற்கு 2016.09.07 ஆம் திகதியன்று அமைச்சரவை உப குழுவினால் தீர்மானிக்கப்பட்டது என்பதையும்;

(v) மேற்படி விமானங்களை பிறிதொரு விமான நிறுவனத்துக்கு விற்பனை செய்தல் அல்லது AerCap நிறுனத்தினால் கோரப்பட்டுள்ள இழப்பீட்டுத் தொகையை குறைத்தல் தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்தாது மற்றும் அமைச்சரவை அங்கீகாரமின்றி திரு. சரித்த ரத்வத்தேயினால் அனுப்பப்பட்ட மின்னஞ்சல் செய்தியொன்றுக்கு அமைய மேற்படி தொகையை செலுத்துவதற்கு பிரதம அமைச்சரின் அலுவலகம் நடவடிக்கை எடுத்துள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) அதன் மூலம் இலங்கை அரசாங்கத்துக்கு ஏற்பட்ட இழப்பு மற்றும் பொருளாதார பாதிப்பு தொடர்பாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதை அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1351/ '16

கௌரவ டலஸ் அழஹப்பெரும,— போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) புகையிரத திணைக்களத்திற்கு சொந்தமான மொத்தக் காணிகளின் அளவு ஒவ்வொரு நகரத்தின் அடிப்படையில் தனிதனியே யாது என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேலே (அ) இல் குறிப்பிடப்பட்டுள்ள மொத்தக் காணிகளின் அளவில் குத்தகை அடிப்படையில் அல்லது வேறு ஏதேனுமோர் அடிப்படையில் தற்போது திணைக்களத்தின் உபயோகத்திலிருந்து நீக்கப்பட்டுள்ள காணிகளின் அளவு,

(i) ஏற்புடைய பரப்பளவு;

(ii) ஏற்புடைய பூகோள ஆளுகைப் பிரதேசம்;

(iii) ஏற்புடைய அடிப்படை;

(iv) திணைக்களத்தின் உபயோகத்திலிருந்து நீக்கப்பட்ட திகதி;

ஆகியவற்றுக்கு அமைய தனிதனியே யாது என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) புகையிரத திணைக்களத்திற்கு சொந்தமான காணிகளை குத்தகைக்கு வழங்க, விற்பனை செய்ய அல்லது திணைக்களத்தின் கட்டுப்பாட்டிலிருந்து நீக்குவதற்கு தற்போது ஏதேனும் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதா;

(ii) ஆமெனில், குறித்த காணிகள் யாவை;

(iii) ஏற்புடைய காணிகளை நீக்குவதற்கான அடிப்படை யாது;

(iv) குத்தகை அடிப்படையில் நீக்கப்பட்டுள்ள காணிகளின் ஒரு பர்சஸிற்கு தற்போது அறவிடப்படுகின்ற குத்தகைத் தொகை யாது;

(v) குத்தகை செலுத்துவதை புறக்கணித்துள்ள காணிகளின் எண்ணிக்கை யாது;

(vi) குத்தகை செலுத்துவதை புறக்கணித்துள்ளமை தொடர்பாக மேற்கொள்ளப் பட்டுள்ள சட்ட நடவடிக்கைகள் யாவை;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1375/ '16

கௌரவ பந்துல குணவர்தன,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2016 வரவு செலவு திட்டத்தில் 129 ஆம் இலக்க முன்மொழிவின் பிரகாரம் அரச மற்றும் தனியார் துறையின் சிறந்த ஒத்துழைப்பை ஊக்குவிப்பதற்காக ரூபா 1000 மில்லியன் ஒதுக்கப்பட்டதென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) கமத்தொழில் அபிவிருத்திக்காக ஒதுக்கப்பட்ட மேற்படி ரூபா 1000 மில்லியன் பயன்படுத்தப்பட்ட விதம் யாதென்பதையும்;

(iii) வரவு செலவு திட்ட முன்மொழிவின் ஊடாக ஒதுக்கப்பட்ட மேற்படி ரூபா 1000 மில்லியன் நிதி வளங்களின் பயனாளிகளின் பட்டியலொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

999/ '16

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2009 ஆம் ஆண்டில் அரசாங்கத்திடம் சரணடைந்த அல்லது கைது செய்யப்பட்ட பிரிவினைவாத பயங்கரவாதிகளில் புனர்வாழ்வளிக்கப்பட்டு நெருங்கிய உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்ட எண்ணிக்கை, ஆண்டு வாரியாக தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(ii) இற்றைவரையில் நெருங்கிய உறவினர்களிடம் ஒப்படைக்கப்படாதவர்கள் இருப்பின், அவர்களை தடுத்து வைத்திருப்பதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1399/ '16

கௌரவ பந்துல குணவர்தன,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2016 வரவு செலவுத்திட்டத்தின் 171 ஆம் முன்மொழிவின் பிரகாரம், கிராமியப் பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் நிகழ்ச்சித்திட்டத்துக்காக, ஒரு கிராமத்துக்கு ரூபா 1.5 மில்லியன் வரையில், ஒதுக்கிக் கொடுக்கப்பட்ட, ரூபா 21,000 மில்லியன் நிதி ஏற்பாடு 2016 ஆம் ஆண்டில் பகிர்ந்தளிக்கப்பட்ட கிராமங்கள் மற்றும் குறிப்பிட்ட ஒவ்வொரு கிராமத்திலும் பூர்த்தி செய்யப்பட்ட கருத்திட்டங்கள் பற்றிய விபரமான பட்டியலொன்றை சமர்ப்பிப்பாரா;

(ii) மேற்படி 14022 கிராம அலுவலர் பிரிவுகளிலும் மேற்குறிப்பிடப்பட்ட வரவு செலவுத்திட்ட முன்மொழிவை நடைமுறைப்படுத்திய அதிகாரம்பெற்ற நிறுவனங்கள் மற்றும் குறிப்பிட்ட அதிகாரிகள் இக்கருத்திட்டங்களை அமுல்படுத்துவதற்காக 2016 ஆம் ஆண்டினுள் பெற்றுக்கொண்டுள்ள நிதித்தொகையைக் காட்டும் பட்டியலொன்றை சமர்ப்பிப்பாரா;

(iii) மேற்படி வரவு செலவுத்திட்ட முன்மொழிவின் பிரகாரம், ஒரு கிராமத்துக்கு ரூபா 1.5 மில்லியன் வீதமான நிதி ஏற்பாட்டை பெற்றுக்கொள்ளாத அல்லது அதில் ஒரு பகுதியை மாத்திரம் பெற்றுக்கொண்ட கிராம அலுவலர் பிரிவுகளின் பட்டியலை சமர்ப்பிப்பாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

# எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

## (2017 மார்ச் 10, வெள்ளிக்கிழமை)

925/ '16

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பியதாஸ குடா பாலகே என்பவர் ஸ்ரீ லங்கா இன்சூரன்ஸ் மற்றும் அதனுடன் இணைந்த நிறுவனங்களில் வகித்த பதவிகள் யாவை என்பதையும்;

(ii) அந்தப் பதவிகளை வகித்த கால எல்லை ஒவ்வொரு பதவிக்கேற்ப வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) இவரது கல்வி மற்றும் தொழில் தகைமைகள் யாவை என்பதையும்;

(iv) இவர் ஒவ்வொரு பதவிக்காக பெற்றுக் கொண்ட மாதாந்த சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

# 2017 மார்ச்சு 21, செவ்வாய்க்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

841/ '16

கௌரவ புத்திக பத்திரண,— சுற்றுலாத்துறை அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேவாலயம், மாத்தறை மாதா ஆலயம், மடு தேவாலயம், ராகம பெசிலிகா தேவாலயம் ஆகிய தேவாலயங்கள் இலங்கை கிறிஸ்தவ மற்றும் கத்தோலிக்க பக்தர்களின் பிரதான புனித தலங்களாகும் என்பதையும்;

(ii) இப்புனித தலங்களுக்கு வருகை தருகின்ற பக்தர்களுக்கு தேவையான பொது வசதிகள் ஆகக்குறைந்த மட்டத்தில் உள்ளன என்பதையும்;

(iii) இதன் காரணமாக இப்புனித தலங்களின் நடைபெறுகின்ற வருடாந்த உற்சவங்களின்போது பக்தர்கள் பெரும் கஷ்டங்களுக்கு உள்ளாகின்றனர் என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) இப்புனித தலங்களை அபிவிருத்தி செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளதா என்பதையும்;

(ii) வருடாந்த உற்சவங்களுக்காக அரசாங்கத்தினால் வழங்கப்படும் நிதி வசதிகள் உள்ளிட்ட வேறு உதவிகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

976/ '16

கௌரவ பிமல் ரத்நாயக்க,— பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வடமேல் மாகாணத்தின் சிலாபம், இரணவில பிரதேசத்தில் "அமெரிக்காவின் குரல்" (Voice of America) என ஒலிபரப்பு நிலையமொன்று உள்ளதா;

(ii) ஆமெனில், அதற்காக வழங்கப்பட்டுள்ள காணியின் அளவு யாது;

(iii) மேற்படி காணி வழங்கப்பட்டுள்ளது இறையிலி அடிப்படையிலா இன்றேல் குத்தகை அடிப்படையிலா;

(iv) குத்தகை அடிப்படையிலாயின், இலங்கை அரசாங்கத்திற்கு செலுத்தியுள்ள குத்தகைத் தொகை ஒவ்வொரு வருடத்திற்கிணங்க வெவ்வேறாக யாது;

(v) இந்த நிலப்பரப்பில் இலங்கை அரசாங்கத்தின் அனைத்துச் சட்டதிட்டங்களும் அமுல்படுத்தப்படுகின்றனவா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) "அமெரிக்காவின் குரல்" நிறுவனத்தை ஆரம்பிக்க இலங்கை அரசாங்கம் மற்றும் ஐக்கிய அமெரிக்க அரசாங்கம் அல்லது "Voice of America" நிறுவனத்துடன் செய்துகொண்டுள்ள உடன்படிக்கைகள் யாவை;

(ii) மேற்படி உடன்படிக்கைகள் அனைத்தையும் சபையில் சமர்ப்பிப்பாரா;

(iii) மேற்படி நிறுவனத்தில் சேவையாற்றுகின்ற இலங்கையர் மற்றும் வெளிநாட்டவர்களின் எண்ணிக்கை தனித்தனியாக எவ்வளவு;

(iv) அந்நிறுவனத்தினால் ஆற்றப்படுகின்ற வேலைகள் மற்றும் ஒலிபரப்பப்படுகின்ற நிகழ்ச்சிகள் யாவை;

(v) மேற்படி வேலைகள் மற்றும் நிகழ்ச்சிகளை ஒழுங்குமுறையாக்குகின்ற இலங்கை அரச நிறுவனம் யாது;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1008/ '16

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— நீதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தேசிய பாதுகாப்புக்கும் மற்றும் சனநாயகத்துக்கும் அச்சுறுத்தலாகக் காணப்படுவதனால், 2015.01.08 ஆம் திகதி இரவில் சனாதிபதித் தேர்தல் முடிவுகளை இடைநிறுத்தும் சதித்திட்டமொன்று குறித்து முன்னுரிமை அடிப்படையில் புலனாய்வு செய்யுமாறு கோரி, 2015.01.14 ஆம் திகதி வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் மங்கள சமரவீர குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு முறைப்பாடொன்றை சமர்ப்பித்துள்ளார் என்பதையும்;

(ii) இது தொடர்பில் நான் முன்வைத்த பாராளுமன்ற வாய்மூல வினாவுக்கு 2016.03.09 ஆந் திகதி விடை அளித்த, சட்டம், ஒழுங்கு மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சர், சட்ட மாஅதிபரின் ஆலோசனைகள் கிடைக்கப்பெறாமையால் மேல் நடவடிக்கைகள் தடைப்பட்டுள்ளதாக தெரிவித்தார் என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) மேற்குறிப்பிட்ட புலனாய்வு அறிக்கை சட்ட மாஅதிபருக்கு கிடைக்கப்பெற்ற திகதி யாது;

(ii) மேற்குறிப்பிட்ட புலனாய்வு பற்றிய சட்ட மாஅதிபரின் ஆலோசனைகள் பொலிஸாருக்கு அனுப்பிவைக்கப்பட்ட திகதி யாது;

(iii) சட்ட மாஅதிபரின் ஆலோசனைகள் இதுவரையில் அனுப்பிவைக்கப் படவில்லையெனில், இதற்கு ஏதுவான காரணிகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1101/ '16

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015.01.08 ஆம் திகதிக்குப் பின்னர் தேசிய வீடமைப்பு அதிகாரசபையினால் இற்றைவரை நிர்மாணிக்கப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி வீடுகளின் எண்ணிக்கை மாவட்ட அடிப்படையில் வெவ்வேறாக எத்தனையென்பதையும்;

(iii) மேற்கூறிய வீடுகளை நிர்மாணிக்கும் போது வீடமைப்புக் கடன்களாக வழங்கப்பட்ட பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

(iv) அந்த வீடமைப்புக் கடன்கள் மாவட்ட அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) 2015.01.08 ஆம் திகதியின் பின்னர் அதிகாரசபையினால் இது வரை நிர்மாணிக்கப்பட்டுள்ள உதவிகள் பெறும் வீடுகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) அந்த எண்ணிக்கை மாவட்ட அடிப்படையில் வெவ்வேறாக எத்தனையென்பதையும்;

(iii) அதற்காக ஒதுக்கப்பட்ட மொத்தப் பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

(iv) அந்தப் பணத்தொகை மாவட்ட அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

அவர் அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) 2015.01.08 ஆம் திகதியின் பின்னர் அதிகாரசபையினால் இது வரை நிர்மாணிக்கப்பட்டுள்ள வீடமைப்புக் கிராமங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) அந்த எண்ணிக்கை மாவட்ட அடிப்படையில் வெவ்வேறாக எத்தனையென்பதையும்;

(iii) அதற்காக ஒதுக்கப்பட்ட மொத்தப் பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

(iv) அந்தப் பணத்தொகை மாவட்ட அடிப்படையில் வெவ்வோறக எவ்வளவு என்பதையும்;

அவர் மேலும் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1400/ '16

கௌரவ பந்துல குணவர்தன,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2016 வரவு செலவுத் திட்டத்தின் 172 ஆம் இலக்க முன்மொழிவின் பிரகாரம், வவுனியாவில் புதிய பொருளாதார வலயமொன்றை உருவாக்குவதற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 200 மில்லியன் நிதி ஏற்பாடு 2016 ஆம் ஆண்டினுள் செலவிடப்பட்ட விதம் பற்றிய விபரமான செலவுப் பட்டியலொன்றை சமர்ப்பிப்பாரா;

(ii) கிராமியப் பொருளாதார அலுவல்கள் பற்றிய அமைச்சுக்கு ஒதுக்கப்பட்ட மேற்படி நிதியில் 2016.03.31 ஆம் திகதிக்கு முன்னர் குறிப்பிட்ட அமைச்சுக்கு விடுவிக்கப்பட்ட நிதித் தொகை யாது;

(iii) மேற்படி பொருளாதார வலயத்துக்காக ரூபா 200 மில்லியன் ஒதுக்கப்படுகையில் அல்லது அதற்குப் பின்னர் இக்கருத்திட்டம் பற்றிய சாத்தியவள அறிக்கை ஒன்று தயாரிக்கப்பட்டதா;

(iv) ஆமெனில், அதனை சமர்ப்பிப்பாரா;

(v) இன்றேல், ஏன்;

(vi) 2016 ஆம் ஆண்டினுள் இந்த முக்கியமான கருத்திட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்கு, ஏற்புடைய மாகாண சபையிலிருந்து முழுமையான அனுசரணையைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

842/'16

கௌரவ புத்திக பத்திரண,— பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சுயாதீன தொலைக்காட்சி சேவையில் ஒளிபரப்பப்படும் 'கோப்பி கடே' தொலைக்காட்சி நாடகத் தொடர் தென் ஆசியாவில் மிக நீண்ட தொலைக்காட்சி நாடகத் தொடராகுமென்பதையும்;

(ii) அது இற்றைவரை உரிய பாராட்டுக்கு உள்ளாகவில்லை என்பதையும்;

(iii) இந்நிலைமையானது இதில் நடிப்பாற்றலாலும் ஏனைய துறைகளின் மூலமாகவும் பங்களிப்பு வழங்கிவரும் கலைஞர்களுக்கு இழைக்கப்படும் அநீதியாகும் என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) ‘கோப்பி கடே’ தொலைக்காட்சி நாடகத்தொடரின் ஆரம்பம் முதல் 20 – 30 வருடங்கள், 10 – 20 வருடங்கள், 5 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் எனும் வகையில் நடிப்பாற்றலாலும் ஏனைய தொழில்நுட்ப துறைகளிலும் பங்களிப்பு வழங்கும் கலைஞர்கள் தனித்தனியாக யாவரென்பதையும்;

(ii) அரசாங்கம் அல்லது சுயாதீன தொலைக்காட்சி சேவை அக்கலைஞர்களின் நலன்புரிக்காக நடவடிக்கை மேற்கொண்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அந்நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மேற்படி கலைஞர்களை பாராட்டுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ளுமா என்பதையும்;

(ii) ஆமெனில், அது எவ்வாறென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1011/ ’16

கௌரவ பிமல் ரத்நாயக்க,— போக்குவரத்து, சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்சமயம் நாட்டிலுள்ள சகல பிரதேசங்களிலும் பாடசாலை மாணவர்களின் போக்குவரத்திற்காக தனியார் வான் வண்டிகள் மற்றும் முச்சக்கர வண்டிகள் பெருமளவில் பயன்படுத்தப்படுகின்றன என்பதையும்;

(ii) பாடசாலை விடுமுறை காலத்திலும் வான் வண்டிகளுக்கு கட்டணம் அறவிடப்படுகின்றதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) தற்சமயம் நாட்டில் பாடசாலை மாணவர்களின் போக்குவரத்துக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ள வாகனங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி வான் வண்டிகளின் தரம், வாகனமொன்றில் இருக்க வேண்டிய ஆசனங்களின் எண்ணிக்கை மற்றும் வான் வண்டிகளுக்கென மாணவர்களிடமிருந்து அறவிடப்படுகின்ற கட்டணம் ஆகிய விடயங்கள் தொடர்பில் ஏதேனும் ஒழுங்குமுறைகள் உள்ளனவா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1042/ ’16

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) முன்னாள் சனாதிபதி சந்திரிக்கா குமாரணதுங்க நிகழ்கால அரசாங்கத்தில் ஏதேனும் பதவியை வகிக்கின்றாரா;

(ii) அவருக்கு நல்லிணக்கம் தொடர்பான ஏதேனும் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளதா;

(iii) அவருக்கு அரசாங்கச் செலவில் ஹெலிகொப்டர் மூலமாக போக்குவரத்து வசதிகள் வழங்கப்பட்டுள்ளனவா;

(iv) அவருக்கு வழங்கப்பட்டுள்ள வாகனங்களின் எண்ணிக்கை, பாதுகாவலர்களின் எண்ணிக்கை மற்றும் பிற வசதிகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1407/ '16

கௌரவ பந்துல குணவர்த்தன,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2016 வரவு செலவுத்திட்டத்தில் 183 ஆம் இலக்க முன்மொழிவின் பிரகாரம், கௌரவ பிரதம அமைச்சரின் கொள்கைப் பிரகடனத்தில் குறிப்பிடப் பட்டுள்ளவாறு, தாபிப்பதற்கு முன்மொழியப்பட்ட விசேட கமத்தொழில் மற்றும் மீன்பிடி ஏற்றுமதி வலயங்களில், 2016 ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்ட வலயங்களின் எண்ணிக்கை மற்றும் அவை தாபிக்கப்பட்டுள்ள இடங்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி பிரேரணைக்கு அமைய, தாபிக்கப்பட்ட ஒவ்வொரு வலயத்திற்காகவும் அரசாங்கத்தினால் ஏற்கப்பட்ட மொத்த செலவினம் தனித்தனியே எவ்வளவு என்பதையும்;

(iii) இந்த கமத்தொழில் மற்றும் மீன்பிடி ஏற்றுமதி வலயங்களின் பொறுப்பை எந்த அரச நிறுவனம் ஏற்றுள்ளது என்பதையும்;

(iv) 2016 ஆம் ஆண்டில் அவ்வாறான வலயங்கள் தாபிக்கப்பட்டிருப்பின், மேற்படி ஒவ்வொரு வலயத்தினதும் ஏற்றுமதி வருவாய் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

709/ '16

கௌரவ எஸ். வியாழேந்திரன்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (4)

(அ) 2015 சனவரி மாதம் 08 ஆம் திகதியிலிருந்து அறிமுகப்படுத்தப்பட்ட 100 நாள் வேலைத்திட்டத்தின் ஆரம்பத்திலிருந்து இன்று வரை கல்வி அமைச்சில் சிற்றூழியர் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளனவா என்பதை அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி நியமனங்கள் வழங்கப்படுகையில் பரிசீலிக்கப்பட்ட தகைமைகள் யாவை என்பதையும்;

(ii) அவ்வாறு எத்தனை நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன என்பதையும்;

(iii) மேற்படி நியமனங்களின் எண்ணிக்கை ஒவ்வொரு மாவட்டத்துக்கமைய வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iv) மேற்படி நியமனங்கள் வழங்கப்பட்டுள்ள தமிழ் சிற்றூழியர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

723/ '16

கௌரவ ரி. ரஞ்ஜித் த சொய்சா,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (5)

(அ) (i) இலங்கையின் தற்போதைய உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பொதுப்படுகடன் தொகை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(ii) மொத்த பொதுப்படுகடன் தொகை தேசிய வருமானத்தின் சதவீதமாக எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி சதவீதம் 2004 ஆம் ஆண்டில் இருந்த பொதுப்படுகடன் தொகையின் சதவீதத்தையும் விட குறைவானதா அல்லது அதிகமானதா என்பதையும்;

(iv) அக்கடனைச் செலுத்தித் தீர்ப்பதற்கு அரசு பிரேரிக்கும் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) அண்மைக் காலம் முதல் மேற்படி கடன் தொகை சம்பந்தமாக தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சினால் இந்நாட்டு அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்கள் வாயிலாக விளம்பரம் செய்வதற்கு எவ்வளவு பணத்தொகை ஒதுக்கப்பட்டுள்ளதென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி அறிவித்தல்களை பிரச்சாரம் செய்வதற்கு அரச மற்றும் தனியார் தொலைக்காட்சி ஊடகங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள பணத்தொகை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(ii) அரச மற்றும் தனியார் வானொலி ஊடகங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள பணத்தொகை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iii) தினசரி மற்றும் வாராந்த பத்திரிகைகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ள பணத்தொகை எவ்வளவென்பதையும்;

அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

828/ '16

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— அரச தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (4)

(அ) (i) ஹிங்குராண சீனித் தொழிற்சாலைக்கு சொந்தமான காணிகளில் கரும்புச் செய்கை மேற்கொள்ளப்படாத காலங்களிலும் கரும்புச் செய்கை செய்யப்படாத பகுதிகளிலும் மாற்றுப் பயிராக நெல் பயிரிட முடியுமென்பதை அவர் ஏற்றுக்கொள்கிறாரா;

(ii) சீனிக் கைத்தொழிலுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாத வகையில் நுரைச்சோலையாயவிலும் தீகவாபி வலயத்திலும் நெற் செய்கைக்கு நடவடிக்கை எடுக்க முடியுமென்பது அவதானிக்கப்பட்டுள்ளதா;

(iii) தற்போது ஹிங்குராண சீனிக் கம்பனியை முகாமைத்துவம் செய்கின்ற கல்ஓயா பெருந்தோட்டக் கம்பனியினால் கரும்புச் செய்கை தவிர்ந்த நெற் செய்கை அல்லது வேறு பயிர்செய்கை நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள விவசாயிகளின் காணிகள் மீள சுவீகரிக்கப்படுமென தெரிவித்து கடிதம் அனுப்பப்பட்டுள்ளதை அறிவாரா;

(iv) கரும்புச் செய்கைக்கு பாதிப்பேற்படாத வகையில் நெல் பயிரிடும் விவசாயிகளி ன் காணிகளை பாதுகாக்கும் வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவாரா;

என்பதை அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

931/ '16

கௌரவ சந்திம கமகே,— மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) இலங்கை மின்சார சபை, தனியார் துறையிடமிருந்து மின்சாரத்தைக் கொள்வனவு செய்கையில், கேள்விப்பத்திர நடைமுறையைப் பின்பற்ற வேண்டுமென மின்சார சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளமை குறித்து அறிவாரா;

(ii) இதுவரையில் மேற்கொள்ளப்பட்டுள்ள மின்சார கொள்வனவுகளின்போது கேள்விப்பத்திர நடைமுறை பின்பற்றப்பட்டுள்ளதா;

(iii) ஆமெனில், அச்சந்தர்ப்பங்கள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

937/ '16

கௌரவ (பேராசியர்) ஆசு மாரசிங்க,— மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) புகையற்ற விறகு அடுப்பு பாவனையை பிரபல்யப்படுத்துவதற்கு மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(ii) இதற்கென இற்றைவரை மேற்கொள்ளப்பட்டுள்ள முதலீடு எவ்வளவென்பதையும்;

(iii) மக்களுக்கு வர்த்தக அடிப்படையில் எரிபொருள் விறகு பெற்றுக்கொடுப்பதை மேம்படுத்துவதற்கு அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iv) எரிபொருளுக்கான தாவரச் செய்கைக் கருத்திட்டங்களின் கீழ், தாவரங்கள் பயிரிடப்பட்டுள்ள நிலப் பரப்பளவு எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

948/ '16

கௌரவ எஸ்.சீ. முத்துகுமாரண,— மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) மகாவலி அபிவிருத்திக் கருத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட பின்னர் தலாவ, தம்புத்தேகம, கல்னேவ மற்றும் இப்பலோகம ஆகிய பிரதேச செயலாளர் ஆளுகைப் பிரதேசங்களில் மயானங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிலப்பரப்புகள் படிப்படியாக குறைவடைந்ததென்பதையும்;

(ii) அதற்கான தீர்வாக அப்பிரதேசங்களுக்காக தகனக்கூடமொன்றை அமைத்துத்தருமாறு மக்கள் நீண்டகாலமாக தங்களின் அமைச்சிடம் கோரிக்கை விடுத்தனரென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேலே குறிப்பிட்ட கோரிக்கையை நிறைவேற்றுவதற்காக, 2014 ஆம் ஆண்டுக்காக கலாவெவ தொகுதியின் அபிவிருத்திக்காக ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடுகளிலிருந்து எப்பாவல மயானத்தில் தகனக்கூடமொன்றை நிர்மாணித்தல் ஆரம்பிக்கப்பட்ட திகதி யாது;

(ii) தகனக்கூடத்தை நிர்மாணிக்க ஒதுக்கப்பட்ட பணத்தொகை யாது;

(iii) அதன் நிர்மாணிப்பு இடைநடுவில் கைவிடப்பட்டுள்ளது ஏன்;

(iv) அதன் நிர்மாணிப்புகளை நிறைவுசெய்து மக்களின் பாவனைக்கு ஒப்படைக்கும் திகதி யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?